## கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை-2013

---

### 1. நிதிக்கூற்றுகள்

---

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 மே 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

---

### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

---

உள்ளுராட்சி மாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஎ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990ஆம் ஆண்டு காணாமல் போன ஓர்உழவு இயந்திரத்தின் பெறுமதியான ரூபா.681,000 தொகையை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3. பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையிலிருந்து பெறவேண்டிய ரூபா.10,076,114 தொகையான வீதவரி பத்து வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அத்தொகை இந்த அறிக்கைத் திகதிவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியை வறிதாக்கிய மற்றும் இளைப்பாறிய நான்குஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா.96,026 தொகையை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்வுச்சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகட்டடிடம் | 35,936,292 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 387,376 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமானபட்டியல் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 3,009,982 | |
| தளபாடங்களும்,பொருத்துக்களும் | 713,484 | |
| நூல் நிலைய புத்தகங்கள் | 1,202,649 | |

### 1.3.5 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழேகாட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதிநிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டின் பன்னிரெண்டு சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக் கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டுக்கான வருமானம் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு.

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி, 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டு வரும் செலவினங்களிலும் கூடியவருமானம் ரூபா.4,949,089 ஆகும். எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா. 2,010,863 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.6,959,952 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வரிகளும்,வீதவரிகளும் | 1,100,000 | 203,670 | 896,330 | 81 |
| வாடகை | 3,055,000 | 2,506,533 | 548,467 | 18 |
| உரிமைக் கட்டணங்கள் | 1,575,000 | 1,428,636 | 146,364 | 09 |

#### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்டவீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் சபையால் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1. ஒப்பந்தநிர்வாகம்

---

பிரதேசசபைக்குச் சொந்தமான கொல்களம் ரூபா.1,788,189 கிரயத்தில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் அல்-ஹிறாசன சமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக, பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) டீழுஞ கணியப்பட்டியல் மதிப்பீட்டின் படி (விடயம் 14) "ணுைெஉ யடரஅைெரைஅ யனெ உழடழரச உழயவநன சழழகைபெ ளாநநவள" கூரைத் தகடுகள் ஒப்பந்தக்காரரால் பயன் படுத்தப்பட்டிருக்கவேண்டும். இருந்த போதிலும் 2014 யூன் 30 இல் செய்யப்பட்ட பௌதீக கணக்காய்வுப்பரிசோதனையில் மெல்லிய துருப்பிடிக்கத்தக்க கூரைத் தகடுகள் பாவிக்கப்பட்டிருந்தமையால் கூரைத் தகடுகள் துருப்பிடித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக 250 சதுர மீற்றருக்குப் பொருத்தப்பட்டிருந்த கூரைத்தகடுகள் உடைந்து விழும் நிலையில் காணப்படுவதனால் அவற்றிற்காக செலவு செய்யப்பட்ட ரூபா .545,668 தொகையானது விளைவற்ற செலவாகக் காணப்படுகின்றது.

(ஆ) மலசலகூடம் ரூபா. 103,498 செலவில் கட்டப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு பரிசோதனையின் போது மலசலக் குழி (வுழடைநவ ீவை) நிர்மாணிக்கப்படாததன் காரணமாக, மலசலகூடத்தை பயன்படுத்த முடியாதுள்ளது.

(இ) கொல்களத்திற்கான மின்சார இணைப்புக்கு ரூபா.45,367 தொகை கணியச் சிட்டையில் (டிடைட ழக ுரயவெவைல) உள்ளடக்கப்பட்டிருந்த போதும், இவ்வேலை செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தால் கொல்களத்தை இரவு வேலைகளில் பயன்படுத்த முடியாதுள்ளது.

(ஈ) கொல்களத்திற்கு நிர் இணைப்பு வேலைகளுக்கு (ீடரஅிபைெ றழசம ) ரூபா.51,127 தொகை கணியச்சிட்டையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இவ்வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அருகில் உள்ளவாவியின் அசுத்தமான நீர் கொல்களத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

(உ) ரூபா.9,160 கிரயத்தில் நான்கு கதவுகள் ரூபா.33,640 மொத்ததொகைக்கு மதிப்பிடப்பட்டிருந்தபோதிலும், ஒருகதவு மாத்திரமே கொல்களத்தில் பொருத்தப்பட்டிருந்தது.

### 3.2. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------

சபையின் சிறுவர் பூங்காவிற்கான விளையாட்டு உபகரணங்களை பொருத்துவதற்கான ஒப்பந்தம் ''புறநெகும:திட்டத்தின் கீழ் ஓர் தனியார் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், சபையின் தவிசாளர் சிறுவர் பூங்காவிற்குப் பொருத்துவதற்கான விளையாட்டு உபகரணங்களைத் தெரிவு செய்வதற்கு கொழும்புக்கு சென்றவகையில் ரூபா.3,000 மீளாய்வாண்டின் போது எரிபொருள் செலவாக வழங்கப்பட்டுள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------

ஓவ்வொரு உள்ளுராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ளவேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளுராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ள படியான செலவினத்திற்கும் இடையில் 45% தொடக்கம் 92% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

**5.	முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்**

**-----------------------------------------------------------**

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு